# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2008
புரட்டாதி 12
ஷவ்வா பிறை 14
புதன் (28-9-77)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 32

விலை சதம் 35


# "ஆக்கிரமிப்பாளர் சிங்களவர்களே! ஆத்திரமூட்டியவர் தமிழர்களல்ல!"

## கலவரம் பற்றி 'கார்டியன்' கருத்து!

இலங்கையில் ஆகஸ்ட் மாதத்தில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற 'இனக் கொலை' பற்றி லண்டனிலிருந்து வெளிவரும் உலகின் முன்னணி ஏடுகளில் ஒன்றான 'கார்டியன்' கட்டுரையொன்று வெளியிட்டுள்ளது. அக் கட்டுரையில், சிங்களவர்களே ஆக்கிரமிப்பாளர்களாக நடந்து கொண்டிருப்பதாகவும், தமிழர்கள் சிங்களவர்களுக்கு ஆத்திரமூட்டாத முறையில் மிகவும் நிதானத்துடன் நடந்துகொண்டதாகவும், நடைபெற்ற சிங்கள இனவெறிக் கொடுமைகளின் பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனிநாடு இலட்சியம் மேலும் வலுவடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கட்டுரையை மார்ட்டின் வூலாகொட் என்பவர் எழுதியிருக்கிறார்.

"இனமோதல் காரணமாக இலங்கை மற்றோர் சைப்பிரஸ் ஆக மாறுவதாக மார்ட்டின் வூலாகொட் கணிக்கிறார்" என்ற தலைப்பில் "சிறிலங்கா மீது படிந்துள்ள நிழல்" (The Shadow over Sri Lanka) என்னும் தலைப்பில் 'கார்டியன்' எழுதியிருப்பதாவது:-

"இலங்கையில் - இரண்டு கிழமைகளாக நடைபெற்ற கலவரத்தில், பெரும்பான்மை சிங்களவர்கள் சிறுபான்மையினரான தமிழர்களைத் தாக்கியும், கொள்ளையடித்தும், கொலை செய்தும் முடித்தபின்னர், புதிய ஐ. தே. கட்சி அரசாங்கத்தின் பிரதமரான ஜே. ஆர். ஜெயவர்த்தனா நிலைமையை கட்டுப்படுத்திவிட்டதாக தோன்றுகிறது. நடைபெற்ற கலவரத்தின் காரணமாக, சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையேயுள்ள பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணும் வாய்ப்புக்கள் மங்கியுள்ளன. அத்தகைய வாய்ப்புக்களை நடைபெற்ற கலவரங்கள் மோசமான முறையில் பாதித்துள்ளன.

மொழி, இனவெறியைத் தூண்டிவிடுவது—1950ம் ஆண்டுக்குப் பின்னர், தேர்தலில் தோல்வியுற்ற அரசியல் வாதிகள் இலங்கையில் பின்பற்றி வருகின்ற ஒரு நிரந்தர முறையாக இருந்து வருகிறது. இப்போது பதவியிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி இதே விளையாட்டை 1956 ம் ஆண்டு செய்தது; 1965 ம் ஆண்டு திருமதி பண்டாரநாயக்காவின் சிறீலங்கா சுதந்திரக்கட்சி

(4ம் பக்கம் பார்க்க)

## உதவிக்கரம் நீட்டும்படி இந்திய அரசுக்கு கோரிக்கை

ஆகஸ்டு மாதம் பிற்பகுதியில் இலங்கையிலே நடைபெற்ற கலவரத்தின்போது, சிங்களப் பெரும்பான்மையினர் திட்டமிட்டே அங்குள்ள தமிழர்களைக் கொன்று குவித்துள்ளார்கள். உற்றுரையும், உறைவிடங்களையும் பாதுகாப்பையும் இழந்து ஆதரவின்றித் தவிக்கும் ஈழத் தமிழர்களுக்கு உடனடியாக உதவிட இந்திய அரசு முன்வரவேண்டும்.

இவ்வாறு சென்னையிலுள்ள அறிவியக்கப் பேரவை ஒரு தீர்மானம் மூலம் இந்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. தீர்மானத்தை விளக்கி, பேரவையின் அமைப்பாளர் முனைவர் (டாக்டர்) சாலை இளந்திரையன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

"இலங்கைத் தமிழர்கள் இந்த இனவெறித் தாக்குதலால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உலகம் முழுவதும் அறிந்திருக்கின்றது. தமிழகத்திலே உள்ள (மாநிலக்) கட்சிகள் மட்டுமன்றி, இந்திய அரசியல் கட்சிகள் அனைத்துமே, இந்தக் கொடு

(4ம் பக்கம் பார்க்க)

## றொடீசிய தேசிய விடுதலை இயக்கம் ஈழத்தமிழர்களுக்கு பூரண ஆதரவு!

சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஈழத் தமிழ் மக்கள் நடத்தி வரும் தேசிய விடுதலை போராட்டத்துக்கு றொடீசிய தேசிய விடுதலை இயக்கமான "சிம்பாவே மக்களின் கூட்டுக் கட்சியின்" ஆதரவையும், அனுதாபத்தையும், அக்கட்சியின் ஐரோப்பிய பிரதிநிதி திரு. றெக்ஸ்சிவேரா தெரிவித்திருக்கிறார். லண்டனில் அண்மையில் நடைபெற்ற ஈழமாணவர் பொது மன்ற அமைப்புக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.

ஈழ மாணவர் பொதுமன்ற முதலாவது மாணவமாநாடு ஆகஸ்ட் 19, 20 ஆகிய திகதிகளில் லண்டன் றோயல் கொமன் வெல்த் சபையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிம்பாவே (றொடீசிய) மக்களின் கூட்டுக் கட்சியின் ஐரோப்பிய பிரதிநிதி திரு. றெக்ஸ்சிவேரா பேசுகையில் கூறியதாவது :-

"சிம்பாவே" மக்களாகிய நாம் றொபேட் மக்காபேயின் தலைமையில் இயங்கக்கூடிய நாம், இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் கண்டு பாராமுகமாக இருக்க முடியாது. இந்த அட்டூழியர்களைக் கண்டிப்பதோடு, இலங்கைத்தமிழர்களுக்கு நாம் அனுதாபத்தையும் ஆதரவையும் அளிக்கிறோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் ஜெனிவாவிலிருந்து லண்டனுக்கு வந்திறங்கியதும் ரேடியோவைத் திருப்பியதும் முதலில் கிடைத்த செய்தி மேற்கூறிய அட்டூழியங்களே, இதை நீங்களும் கேட்டிருப்பீர்கள். என்ன செய்தீர்கள் என்று உங்களைக் கேட்கவிரும்புகிறேன்.

இப்படியொரு சூழ்நிலை எங்களுக்கும் ஏற்பட்டது. இனவெறிபிடித்த இயன் சிமித்தின் வெள்ளையராட்சி நம்மக்களை 1967-ம் ஆண்டு வஞ்சித்தபோது நாம் செய்தது என்னவென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்தச் சூழ்நிலையில் நாம் எங்கள் நிலையை கணக்கெடுத்தோம். இப்படியொரு நிலைதான் உங்களுக்கும் ஏற்பட்டுள்ளது. ஆகவே உங்களையும், உங்கள் மக்களுடைய நிலையையும் கணக்கெடுங்கள் (TAKE STOCK) என்று சொல்ல விரும்புகிறேன்.

"இங்கு எங்கள் மாணவர்களைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். அவர்கள் என்ன செய்யவேண்டும் என்பதை நன்கு அறிந்தவர்கள். உதாரணத்துக்கு — தங்கள் சேமிப்பில் ஒரு பகுதியை எமது இயக்கத்துக்கு தருகிறார்கள். அது மட்டுமல்ல — தமது படிப்பை முடித்ததும் விரும்பியோ விரும்பாமலோ —

(4ம் பக்கம் பார்க்க)

## உயர் நீதிமன்றத்தில் நாளை ஆட்கொணர்வு மனு விசாரணை!

அண்மையில் அச்சுவேலி ப.நோ.கூ. சங்கக் கொள்ளை சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ரமணாகரன், உதயணன், அருமைச்சந்திரன் ஆகிய தமிழ் இளைஞர்கள் கொழும்பு நீதவானால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பது சட்டவிரோதமானது என்றும், அவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறும் கோரி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணி திரு. செ.வே. விவேகானந்தன் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை நாளை (29-9-77) நடைபெறுகிறது.

இந்த மனு மீது, குறித்த தமிழ் இளைஞர்களின் சார்பாக முன்னாள் உதவி சொலிசிட்டர் ஜெனரல் திரு. வி. த. புள்ளைநாயகம், சட்டத்தரணிகள் திரு. எஸ். ஸி. சந்திரகாசன், திருமதி சாந்தினி ஞானகரன், திரு. ஜி. குமாரலிங்கம், திரு. என். மகேந்திரராஜா, திரு. கனக மனோகரன் ஆகியோர் ஆஜராகின்றனர்.

## மாஸ்கோவில் இலங்கை தூதரின் சிங்கள வெறி!

ஈழத் தமிழ் மக்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவது உள்நாட்டில் மட்டுமல்ல— வெளிநாடுகளிலும் இதே நிலைதான்! வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதர்கள் அங்கு தங்கியிருக்கும் தமிழ் மக்களுக்கும், சிங்கள மக்களுக்குமிடையே பாரபட்சமாகவும் ஓரவஞ்சகமாகவும் நடந்து கொள்கிறார்கள். சோவியத் ரஷியாவிலிருக்கும் இலங்கைத் தூதர் திரு. வோல்டர் ஜெயவர்த்தனா இவ்விதம் தமிழ் மாணவர்களுக்கும், சிங்கள மாணவர்களுக்குமிடையேபாரபட்சம் காட்டி நடப்பதாக தமிழ் மாணவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பொறியியல் கல்வி கற்பதற்காக சோவியத் யூனியனின் தலைநகரான மாஸ்கோவில் தமிழ் மாணவர்களும், சிங்கள மாணவர்களும் தங்கியிருக்கிறார்கள். இந்த மாணவர்களுக்கு, கல்வி, பிரயாண ஒழுங்கு வசதி போன்றவற்றை செய்து கொடுப்ப

(4ம் பக்கம் பார்க்க)

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இனக்கலவரத் தீ மூண்டெரிகையில்

# பொறுப்பற்றுப் பேசியது யார்? பிரதமரா? தமிழ்த்தலைவர்களா?

15-8-77ல் யாழ்ப்பாணத்தில் பொலீஸ் காடையர்களினுல் நடத்தப்பட்ட தீவைப்பு படுகொலைச் சம்பவங்களை ஒட்டி உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் நாட்டில் இனக்கலவரம் எழுந்திருக்கமுடியாது. சிங்களக் காடைத்தனங்களை மறைமுகமாக ஆதரிக்கும் மனப்பாங்கே உடனடி நடவடிக்கை எடுக்கப்படாமைக்குக் காரணமாகும்.

இதனைத் தொடர்ந்து 17ம் திகதி அநுராதபுரத்தில் அரசியல் கட்சி ஒன்றின் பின்னணியில் நடத்தப்பட்ட இனக் கலவரம் — வெறியாட்டம் ஆகியவற்றை உடனடியாக அடக்கவும் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் அவசர கால நிலைமையைப் பிரகடனப் படுத்தி கலவரங்களைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்க அரசு தவறியது ஏன்?

ஆங்காங்கு நடத்தப்பட வேண்டிய, கொள்ளை—கொலை —தீவைப்பு — கற்பழிப்பு — பயங்கரத் தாக்குதல்கள் ஆகியனவெல்லாம் தாராளமாக நடந்தேறிய பின்னரே ஆங்காங்கே ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டது. இதன் உள்ளிரகசியம் பாராளுமன்றத்தில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவின் பேச்சில் வெளிவந்திருப்பததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

''நீங்கள் ஒரு போரை விரும்பினுல் போர் நடக்கட்டும்; சமாதானத்தை விரும்பினுல் சமாதானம் விளங்கட்டும். இது சிறீலங்கா மக்கள் கருத்து.'' இவ்வாறு திரு. ஜயவர்த்தனு கூறியிருப்பதில் அப்படி ஒரு போரை அவர் ஆதரித்துள்ளார் என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. மேற்படி பேச்சும், வானெலியில் திரு. ஜயவர்த்தனு பேசிய 'இதுவரை ஆறு சிங்களவர்களும் எட்டுத்தமிழரும் கொல்லப்பட்டனர்; யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் தற்காப்புக்காகச் சுட்டனர்; கூட்டணியினர் பொறுப்பற்ற முறையில் தனிநாட்டுக் கோரிக்கையைப் பேசியதே கலவரத்துக்குக் காரணம்' என்பனபோன்றகருத்துக்களைக் கொண்ட அறிக்கையினுலுமே சிங்களக் காடையர் மேலும் கொதித்தெழுந்தனர். ஜெயவர்த்தனுவின் பேச்சும் வானெலி அறிக்கையும் முன்னுள் பிரதமர் திருமதி சிறீமா பண்டாரநாயகாவினுலும் திரு. கொல்வின் ஆர். டி. சில்வா அவர்களினுலும் கண்டிக்கப் பட்டதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேம்.

சிங்களவர் ஒருவர்தானும் இறந்த செய்தியை சொல்லக் கூடாத நேரத்தில் ஆறு சிங்களவர் இறந்தனர் என்று சொன்னுல், சிங்களக் காடையர்க்கும் பொதுமக்களுக்கும் எப்படியிருக்கும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

அறிக்கை வெளிவந்த நேரத்தில் தமிழர் எட்டுப் பேரல்லர்; முப்பதுக்கும் அதிகமானேர் கொல்லப்பட்டு விட்டனர் என்பதை ஜெயவர்த்தனு அறியாதிருந்தது ஆச்சரியமே!

தற்காப்புக் கருதி தமிழர் சுட்டனர் என்ற கூற்றில் தமிழர் எதிர்த்தாக்குதலை நிகழ்த்துகின்றனர் என்ற அரசியல் தந்திரோபாயமான பேச்சு தொக்கு நிற்பதை உணரக் கூடியதாக இல்லையா?

கலவரத்தை வன்மையாகக் கண்டித்து அடக்குவதற்குப் பதிலாக, அமிர்தலிங்கத்தின் பேச்சுப்பற்றி விமர்சனம் செய்தது ஏன்? 'அப்படிப் பேசினுல் சிங்களப் பொதுமக்கள் இப்படித்தான் பதிலடி கொடுப்பார்கள்; அதுவே சரி' என்பது போலல்லவா இருக்கிறது!

''கெமுனு சிங்கள இளைஞர்களின் இரத்தத்தில் வாழ்கிறுன்'' என்று விஷம் கக்கிய காரியவாசத்தைக் கண்டிக்காத பிரதமர், இழந்த உரிமைக்காக உரிமைக் குரல் எழுப்பிய கூட்டணியினரைக் கண்டிப்பது — அதுவும் எப்போதோ பேசிய பேச்சை எடுத்து விமர்சிப்பது சிங்கள இனவெறியை மறைமுகமாக ஆதரிப்பதல்லாமல் வேறு என்ன?

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்கூட மனப்பூர்வமானவையாக இருப்பதாகச் சொல்ல முடியாது. 'அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப் படுத்துவது இலேசு; ஆனுல், நாம் ஓர் உயிரைப் பெரிதாக மதிக்கிறேம்; இவ்வாறு அரசு தரப்பில் பேசப்பட்டது. சட்டத்தை மீறி உயிரை இழக்கவிருக்கும் சிங்களக் காடையன் ஒருவனின் உயிர், பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள், தங்கள் உயிரை— உடைமைகளை — மானத்தை இழப்பதிலும் பார்க்க மேலாக அரசுக்குப் படுகிறது; என்ன வேடிக்கையான பேச்சு!

எதிர்க்கட்சித் தலைவர் நாடெங்கும் ஊரடங்குச் சட்டத்தைப் போடும்படி வேண்டினுர், மறுக்கப்பட்டது! யாழ்ப்பாணத்தில் போடவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்; போட்டீர்கள்; முப்பத்தொரு கடைகள் ஊரடங்குச் சட்ட நேரத்தில் தீவைக்கப்பட்டன. மற்றும் நாடு முழுமையும் இருபத்து நான்கு மணித்தியாலம் ஊரடங்குச் சட்டம் போடப் பட்டது. அரசாங்க அலுவலக விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை 21-8·77 ல்! முன்னரே போடவேண்டிய சட்டத்தை நான்கு நாட்கள்கழித்து ஞாயிற்றுக் கிழமை ஓய்வு நாளாகப் பார்த்துப் போடுகிறுர்களாம்? ''எரிகிற வீட்டில் பிடுங்குகிறது லாபம்'' என்பது போலல்லவா? இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் திருகோணமலையில் முப்பத்தாறு மணிநேரமும் தொடர்ச்சியான சட்டம் அமுலில் இருந்தது; அங்கு சிங்களவர் பாதுகாக்கப்படவேண்டும் என்ற உள்நோக்கமே காரணம்!

கொழும்பில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்த தமிழ் மக்களை உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு கப்பல்மூலமாக அனுப்ப அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அவ் அகதிகள் தனது சகோதரர்கள் என்றும் அவர்களைத் தான் விடப்போவதில்லையென்றும் பிரதமர் சொன்னுர். இதற்குள்ளும் அரசியல் லாபம் இருப்பதை நாம் உணர்கிறேம். யூ. என். பி. யின் வெற்றிக்குத் தமிழரும் காரணமாவார், அல்லாமலும், அவர்கள் எல்லோரும் வடக்குக் கிழக்குக்குப் போய்ச் சேர்ந்து விட்டால் தானுகவே தனிநாடு பிரிந்தாலும் பிரிந்துவிடும்; மேலும், அந்நிய உதவிகளோடு தமிழ் மக்கள் கொழும்பில் ஒரு தாக்குதலை மேற்கொள்ளாமல் தடுப்பதற்கு இது ஒரு வழி' 'இவ்வாறெல்லாம் ஜயவர்த்தனு கணக்குப் போட்டிருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை!

ஆனுல். இக் கலவரத்தின் பின்னணியில் அரசியல் சதி ஒன்று இருப்பதை சில நாட்களின் பின்னரே திரு. ஜயவர்த்தனு உணர்ந்தார். மற்றும் அயல் நாடுகளின் தலையீட்டையும் தடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் உள்ளாக வேண்டியிருந்தார். இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே ஓரளவு ஒழுங்காக இருந்தன.

—தென்புலோலி பண்டிதர் வீ. பரந்தாமன்

## மந்தி(ரி)யா? மந்தி(ரி)களா?

சென்ற பொதுத் தேர்தலுக்குப்பின் கல்குடாத் தொகுதியில் ஒரு மந்திரி உருவாக்கப் பட்டிருப்பது அனைவருக்கும் தெரிந்ததே — ஆனுல் அந்த மந்திரியைக் கொண்டு பல மந்தி[ரி]கள்உருவாகிஇருப்பது பலருக்குத் தெரியாத புதிர். இந்த மந்தி[ரி]கள் எல்லாம் சேர்ந்து பல பழிவாங்கல் சம்பவங்களை எல்லாம் வெற்றிகரமாக செய்து முடித்துக் கொண்டு வருகிறுர்கள். இவர்களுடைய பழிவாங்கல் படலம் ஆசிரியர்களின் இடமாற்றங்களுடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்த பழிவாங்கல் சம்பவங்களை ''சுதந்திரன்'' மூலம் தமிழ் மக்களுக்கும், குறிப்பாக கல்குடாத் தொகுதி மக்களுக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறேம். இந்த வரிசையில் முதலாவதாக வந்தாறுமூலையைச் சேர்ந்த திரு. வே. உமாமகேஸ்வரன் அவர்களைப் பார்ப்போம்.

இவர் சென்ற பொதுத்தேர்தல் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்காக, தீவிரமாக உழைத்தவர். வந்தாறுமூலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கடமையாற்றிய இவர்— 3 ம், 4 ம் வகுப்பு விசேட பயிற்சி பெற்று சென்ற வருடம்தான் ஆசிரியர் பயிற்சி கலாசாலையை விட்டு வெளியேறி இப்பாடசாலைக்கு வந்தார். திடீரென இவர் 1-9-77 முதல் இவர் கடமையாற்றிய பாடசாலையில் இருந்து மிகத் தூரஇடமான மட் / மருதங்கேணி அரசினர் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்,

சேவை குறைந்த இளம் ஆசிரியரான இவருக்குப் பதிலாக தரம் இரண்டு V அதிபர் ஒருவரை நியமித்துள்ளமை மட்டுமன்றி, இவரைத் தரம் இரண்டு அதிபர் இருக்கவேண்டிய இடத்திற்குப்பதிலாக தற்காலிக அதிபராக நியமித்துள்ளமையால் இது ஒரு அரசியல் நாடகம் என்றே அனைவரும் கருதுகின்றனர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், மட்டக்களப்புக்கிளை-கிழக்குப்பிராந்திய கல்விப் பணிப்பாளரை சந்தித்தும் இந்த மாறுதலை ரத்துச்செய்ய முடியவில்லை. இது விடயமாக கல்வி அமைச்சுடன் தொடர்பு கொள்ள மேற்படி கிளைச் சங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த ஆசிரியருக்குப் பதிலாக 4 ம் வகுப்பு விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் நியமிக்கப்பட்டமையால் பெற்றேரும் மாணவர்களும் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

அரசியல் பழிவாங்கல் நாடகத்தை வெற்றிகரமாக நடத்தி முடிக்க தமிழர் விடுதலைக்கூட்டணியை ஆதரித்த மேற்படி ஆசிரியரை மாற்றியமை குறித்து கல்குடாத் தொகுதி மக்கள் பலவாகப்பேசிக்கொள்கின்றனர்.

'' பாசி ''

## வாகரையில்இராணுவத்தினரின் அட்டூழியம்

கல்குடாத் தொகுதியின் வாகரை என்னும் கிராமத்தில் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் கவிஞர் வாகரைவாணன் ச. அரியரெத்தினம் கடந்த 31-8-77 புதன்கிழமை இரவு 12 மணியளவில் மட்டக்களப்பு சிங்கள இராணுவத்தினரால் சில ஐ. தே. க. காரரின் பொய் வதந்திகளை நம்பி மிருகத்தனமாக தாக்கப்பட்டு. கைது செய்யப்பட்டு, மட்டுநகர் ராணுவத்தினரின் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கல்குடாவின் நிலையத்துக்கு இழுத்துச் செல்லப் பட்டனர். 2 நாள்வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர். இவரைத் தொடர்ந்து இளைஞர் பேரவையைச்சேர்ந்த ஆ ஞானப்பிரகாசம், த. மார்க்கண்டு, த. தேவதாஸ் (தம்பான்), ஆ. கி. பிரான்சீஸ், சி. சிவநேசலிங்கம் ஆகியோரை எதுவித காரணம் இல்லாமல் இராணுவத்தினரால் கடுமையாக தண்டித்து வருகின்றனர். இவர்களுக்கு நிரந்தர இருப்பிடம் இல்லை. இதனுல் இவர்களின் தகப்பன் தாய் ஆகியோரையும் இவர்களின்பக்கத்திலுள்ளவீட்டாரின் அப்பாவித் தமிழ் மகன் ஞா. சற்குணம், க. விஞயகம் ஆகியோரையும் ''பறத்தெமளோ பறத்தெமளோ'' என்று சொல்லிச்சொல்லி மிருகத்தனமாகத் தாக்கினர்.

இதனைத் தொடர்ந்து கதிரவெளியிலுள்ள அப்பாவித் தமிழ் மக்களையும், அங்கு கடமையாற்றும் கிராம சேவகரையும் சிங்கள வெறிபிடித்த இராணுவத்தினர் அவர்களை வரிசையில் நிறுத்தி மிருகத்தனமாக காலாலும், கையாலும், துப்பாக்கி போன்றவற்ருலும் கடூரமாக தாக்கினர். இதனுல் அவர்களின் சொத்துக்களும் சில பறிமுதல் செய்யப்பட்டன.

இவை எல்லாவற்றிற்கும் காரணம் என்று கருதப்படும் வாகரை கி. ச. தலைவர் சேனுதிராசாவையும் இறுதியில் இராணுவத்தினர் கைது செய்து அவருக்கு செய்யாத வேலைகளையும்செய்து உயிர்மட்டும் தப்பி ஓடவைத்தனர்.

''மில்க்வைற் சலவைப் பவுடர்''

துரித சலவைக்கு
கூடுதல் நீலம் கலந்து தயாரிக்கப்பட்ட
மில்க்வைற் சலவைப் பவுடரை
வாங்கி உபயோகியுங்கள்.
கூடுதல் பயன் பெற
துணிகளை சிறிதுநேரம்
தண்ணீரில் ஊறவிடுங்கள்.
—ஓர் மில்க்வைற் தயாரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எவ்வழிகளைக்கையாண்டேனும் தமிழ் ஈழம் அமைத்தே தீருவோம்!"

## தேசிய அரச பேரவையில் ஆனந்தசங்கரி இலட்சிய முழக்கம்!

**அரசாங்கத்தின் கொள்கை விளக்க கூற்றுக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி கொண்டு வந்த திருத்தம்மீது 19-8-77ல் கிளிநொச்சி பா. உ. திரு வி. ஆனந்தசங்கரி அவர்கள் ஆற்றிய உரையின் முக்கிய பகுதிகள் வருமாறு:—**

பல இன மக்கள் வாழுகின்ற இந்த நாட்டிலே ஆட்சியிலிருந்த அத்தனை அரசாங்கங்களுமே அந்தப் பல இன மக்களுடைய சம்மதத்தையும் ஒத்துழைப்பையும் பெற்று ஓர் ஆட்சியை நடாத்துவதற்குத் தவறிவிட்டன. கடந்த ஏழு ஆண்டுகளாக ஆட்சி புரிந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம், சிறுபான்மை மக்களின் ஆதரவு தங்களுக்கு இருக்கிறது என்று உலகத்திற்குக் காட்டுவதற்காக ஒருவரைப் பிடித்து வாடகைக்கு வைத்து உலகுக்குக் காட்டினார்கள். இன்று அவரும் போய்விட்டார். அதிலும் பார்க்க ஒரு படி கூடத்தான் இன்றைய ஆட்சியாளருக்கு கே. டபிள்யு. தேவநாயகம் அவர்களின் ஆதரவு கிடைத்துள்ளது. கல்குடாப் பிரதிநிதி ஒருவர் மட்டும் இந்த நாட்டுச் சிறுபான்மை இனத்தின் பிரதிநிதியாக ஐக்கிய தேசியக் கட்சியிலே இருந்துவிட்டால் இந்த நாட்டிலே சிறுபான்மையின மக்களுடைய பூரண ஒத்துழைப்புடனும் சம்மதத்துடனும் ஆட்சி நடக்கிறது என்று யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இங்கே ஒரு பேச்சாளர் சூலவம்சத்தையும் மகாவம்சத்தையும் திருப்பி எழுதுவதற்கு முயற்சித்தார். எல்லோரும் மிகச் சரித்திரப் பிரசித்தி பெற்றவர்களாக — சரித்திர ஆசிரியர்களாக, சரித்திர விரிவுரையாளர்களாக மாறிவிட்டார்கள். நானும் இந்தச் சந்தர்ப்பத்திலே ஒரு சரித்திர விரிவுரையாளராக மாற விரும்பவில்லை. ஆனால், ஒன்றை மட்டும் இச் சந்தர்ப்பத்திலே நான் கூற விரும்புகிறேன். இந்த நாடு அந்நிய ஏகாதிபத்தியவாதிகளின் கையிலே சிக்கியிருந்த பொழுதிலே தமிழ்நாடு என்று எமக்கு ஒரு தனிநாடு யாழ்ப்பாணத்திலே நல்லூர் இராஜஸ்தானியிலே அமைக்கப்பட்டிருந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அங்கிருந்து எங்களுக்கு ரோட்டுப் போட்டுத் தாருங்கள் என்று இங்கே யாருமே கேட்கவில்லை. சங்கிலி மன்னனுடைய ஆட்சியிலேதான் எமது தமிழ்ப் பிரதேசம் இருந்தது. எமது தேவைகளை அந்த மன்னன் மூலமாகத்தான் நிறைவேற்றிக்கொண்டோமே தவிர வேறு யார் மூலமாகவுமில்லை. அண்மைக்காலச் சரித்திரத்திலே அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் இந்நாட்டுக்குச் சுதந்திரம் கொடுத்த அடிப்படையிலேயிருந்து சற்றுப் பின்னுக்குச் சென்று பார்த்தால் தமிழ்நாடு ஒரு சுதந்திரநாடாக இருந்திருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது.

ஏதோ நீதி வழங்குகின்றோம், நியாயம் வழங்குகின்றோம் என்றெல்லாம் கூறுகிறார்கள். 139 ஸ்தானங்களை நாங்கள் பெற்றுவிட்டோம்; உங்களுக்கு நியாயம் வழங்குவோம் என்று கூறுகிறீர்கள். இங்கிருக்கின்ற சில உறுப்பினர்களுடைய எண்ணம் தாங்கள் அழியாவரம் பெற்றவர்கள், ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவராக இருக்கின்ற கௌரவ பிரதமர் அவர்கள் அழியாவரம் பெற்றவர் என்று. இந்த வரம் எல்லாம் நீடித்து நிலைத்துவிடும் என்று சிலர் நினைக்கின்றார்கள். ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்ததை, அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தவற்றைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நீங்கள் எந்த விதமான உத்தரவாதங்களைக் கொடுத்தாலும் எந்த விதமான உரிமைகளை எங்களுக்குத் தருகிறோம் என்று சொன்னாலும் ஒன்றைமட்டும் நீங்கள் மறந்துவிட முடியாது.

இன்று 139 ஆசனங்களைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி 1970 ஆம் ஆண்டிலே 18 ஸ்தானங்களைப் பெற்றது. 1956 ஆம் ஆண்டிலே ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற ஸ்தானங்கள் எட்டு. இன்று நீங்கள் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கி தமிழ் மக்களுடைய உரிமைகளை அந்த அரசியலமைப்பிலே சேர்த்துக்கொண்டாலுங்கூட எதிர்காலத்திலே அமையவிருக்கின்ற ஒரு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் நீங்கள் இப்பொழுது பெற்ற 139 ஸ்தானங்களிலும் பார்க்க இன்னும் 10 ஸ்தானங்களைக் கூடுதலாகப் பெற்று வந்து அந்தச் சட்டத்தை வீசி எறிந்துவிடும் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. எங்களுக்கு வேண்டியது நாங்கள் இந்த நாட்டின் பிரஜைகளாக, சுதந்திரமுள்ள பிரஜைகளாக வாழவேண்டும் என்பது தான். கடந்த ஏழாண்டு காலமாக எங்களுக்குச் செய்

## நாம் இங்கு பிச்சை கேட்கவில்லை!

## நமது சுதந்திரத்தையே கேட்கிறோம்

யப்பட்ட கொடுமைகளை உங்களால் நிவர்த்தி செய்ய முடியாது. ஏழாண்டு காலமாக தமிழினம்அடைந்தநட்டத்தை யாராலும் புரிந்துகொள்ள முடியாது.

எதிர்க்கட்சித் தலைவராகிய அமிர்தலிங்கம் அவர்கள் எம்மைப் பொறுத்த வரையில் எமது இனத்தின் தலைவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஓர் இனத்தின், முக்கியமான ஓர் இனத்தின், இந்த நாட்டின் தேசிய இனமொன்றின் தலைவர் பொலீசாரால் தாக்கப்பட்டார். அவர் தாக்கப்பட்டு ஐந்து நாட்களுக்கு மேலாகிவிட்டது. இன்று வரை அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. எங்களை நம்புங்கள் என்று எல்லாரும் பேசிவிட்டுப் போகிறார்கள். நாங்கள் யாரை நம்புவது? ஒரு சின்ன விடயத்திலே ஓர் இனத்தின் சுய கௌரவத்தைப் பாதிக்கும் ஒரு விடயத்திலே, சாதாரணமாக இருந்த இடத்திலிருந்து கொண்டே சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்கக்கூடிய அதிகா[illegible]ரத்தைப் படைத்தவர்கள் இந்தச் சபையிலே இருக்கிற நேரத்திலே, எமது எதிர்க்கட்சித் தலைவர் தாக்கப்பட்டு ஐந்து நாட்களாகியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமலிருக்கிறது.

ஓர் இனத்தின் தலைவர் என்ற காரணத்தினாலேதான் அவரைத் தாக்கியவர்கள்மீது எந்தவிதமான நடவடிக்கையும் அரசாங்கம் எடுக்கவில்லையே தவிர வேறு யாராவது ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மேல் கை வைத்திருந்தாலும் ஒரு பொலீஸ்காரர் இலேசாகத் தப்பித்துக்கொள்ள முடியாது.

நாம் இங்கு யாரையும் பிச்சை கேட்க வரவில்லை. உயர்ந்த பதவிகளைத் தாருங்கள் என்று கேட்கவில்லை. கடந்த காலத்தில் எத்தனை தமிழர்கள் உயர்ந்த பதவி வகித்தார்கள். ஆனால், இன்று இல்லை. நீங்கள் அமைக்கும் கூட்டுத்தாபனங்களிலே, சபைகளிலே எத்தனை தமிழர்கள் அங்கம் வகிக்கிறார்கள்? நீங்கள் நியமிக்கும் அங்கத்தவர்களில் எத்தனை தமிழர்களை நியமிக்கிறீர்கள்? நாம் அந்தப் பதவிகளையெல்லாம் இழக்கத் தயாராக இருக்கிறோம். எங்களுக்குப் பதவியல்ல முக்கியம். எங்கள் மண்ணை எங்களிடம் தந்து எங்களை ஒரு பக்கத்தில் இருக்க விடுங்கள். இரண்டாயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாம் எங்கள் வாழ்க்கையை எவ்வாறு ஆரம்பித்தோமோ அதுபோல வாழ்க்கையை ஆரம்பிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இன்று நாம் சுதந்திரமாக வாழ முடியாத நிலையில் இருக்கிறோம். மதம் பிடித்து, வெறி பிடித்து மக்களை ஏமாற்றும் நோக்கத்தோடு நாம் இங்கு வரவில்லை. யாழ்ப்பாணத்திலே இரண்டு பொலீஸ்காரர்களுக்கும் இரண்டு வாலிபர்களுக்கும் இடையே ஏற்பட்ட சம்பவம், இன்று ஆயிரக்கணக்கான தமிழர்களைத் தாங்கள் இருபது இருபத்தைந்து வருடங்களா[illegible]கச் சேர்த்த எல்லாவற்றையும் விட்டு வெறும் கையோடு, உடுத்த சீலையோடு வடக்கே அனுப்பவேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்றால் நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதைக் கொழும்பு மத்திய தொகுதி இரண்டாவது உறுப்பினர் உணர வேண்டும். இன்னும் விளக்கமாகக் கூறினால், யாழ்ப்பாணத்திலே இருக்கும் ஒரு பெரிய சிங்கள அதிகாரி ஒரு சிறிய தமிழனையும் தாக்கிவிட்டுப் போகலாம்; ஒரு கௌரவமுள்ள சிங்களப் பிரதிநிதி கூட தாக்கிவிட்டுப் போகலாம். அரைச்சதத்துக்கும் வழியில்லாத ஒரு சிங்களக் காடையன் கூட யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு தமிழனைத் தாக்கிவிட்டுப் போகலாம். நாம் கை கட்டி மௌனியாக இருக்க வேண்டும். நியாயம் கேட்க முடியாது.

அங்கே உள்ள சிங்களவர் ஒருவர் காடைத்தனம் காட்டி கௌரவமுள்ள ஒரு தமிழரைத் தாக்கினாற்கூட நாம் வாய் திறக்க முடியாது. கௌரவ எதிர்க்கட்சி முதல்வரைத் தாக்கியது போல சிங்களச் சகோதரர் ஒருவரைத் தாக்கிவிட்டால் முழு இலங்கையிலும் தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள். யாரோ இரண்டு பேர், தரம் கெட்ட, பொலீஸ் அதிகாரிகளாக இருக்கத் தகுதியில்லாதவர்கள் செய்த குற்றத்துக்காக அவரோடு இரண்டு தமிழ் வாலிபர்கள் மோதிய குற்றத்துக்காக இன்று பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் உடைமைகள் எல்லாவற்றையும் இழந்து உற்றாரைப் பிரிந்து வடக்கை நோக்கிச் செல்கிறார்கள். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

ஒரு வாரத்திற்கு முன்பு நான் புகையிரதத்தில் பிரயாணம் செய்கின்ற நேரத்தில் உயர் அதிகாரி ஒருவர் என்னைக் கேட்டார் "இந்தத் தமிழ் ஈழக் கோரிக்கையை நீங்கள் வேடிக்கையாகப் பேசுகிறீர்களா? நீங்கள் உண்மையிலேயே அதைப்பற்றிச் சிந்திக்கிறீர்களா?" என்று. அரசாங்க உத்தியோகத்தர்களாகிய நீங்கள் உங்கள் கந்தோர்களிலே வேலை செய்கின்ற நேரத்திலென்றாலும் சரி, வீதியிலே செல்கின்ற நேரத்திலென்றாலும் சரி, கடைகளிலே சாமான் வாங்குகின்ற நேரங்களிலும் சரி ஒரு சுய கௌரவத்துடன் உங்களால் வாழ முடிகிறதா, உண்மையைச் சொல்லுங்கள் என்று நான் திரும்பி அவரிடம் கேட்டேன். அப்படி நாங்கள் சுய கௌரவத்தோடு சிங்களச் சகோதரர்கள் மத்தியில் வாழ முடியாது என்பது உண்மை என்றார். அதுதான் இன்றைய உண்மையான நிலைமை, நிச்சயமாக நாங்கள் தமிழ் ஈழம் அமைத்தே தீர வேண்டும். இதிலே நாங்கள் வெற்றிகாண்பதற்கு சில காலம் செல்லலாம். அல்லது சில மாதங்கள் கூட எடுக்கலாம். இந்தத் தமிழ் ஈழக் கோரிக்கையிலே வெற்றியடைவதற்கு நாங்கள் எந்தவழிகளைக் கையாள்வதற்கும் ஆயத்தமாக இருக்கிறோம். அதற்காக எமது உயிரையே அர்ப்பணிக்கவும் நாம் தயாராக இருக்கிறோம் என்பதை இக் கௌரவ சபையிலே நான் கூறிவைக்க விரும்புகிறேன்.

கடந்தகாலச் சரித்திரத்தைப் பேசப் போனால், இந்த நாடு யாருக்குச் சொந்தம் என்பது சரித்திரத்திலே சந்தேகமில்லாத வகையில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே தமிழ் மக்கள்தான் எல்லோருக்கும் முன்பு வந்து குடியேறியவர்கள் என்று சரித்திரம் கூறுகிறது. 200 வருடங்களுக்கு முன்பு எழுதிய சரித்திரத்தை வைத்துக்கொண்டு 400 வருடங்களுக்கு முன்பு எழுதிய சரித்திரம் பொய் என்று சொல்லி இந்த நாடு யாருக்குச் சொந்தம் என்று எல்லாம் பேசவேண்டாம்.

காலஞ்சென்ற தலைவர் திரு. செல்வநாயகம் அவர்களின் தலைமையிலே இயங்கிய தமிழரசுக் கட்சி இந்த நாட்டைப் பிரிக்கச்சொல்லி முன்பு கேட்கவில்லை. அவர்கள் ஓரளவுக்குச் சமஷ்டி ஆட்சியைத் தான் கேட்டார்கள். திருவாளர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் தலைமையிலேயிருந்த தமிழ்க் காங்கிரஸ் கட்சி நாட்டைப் பிரி என்று கேட்கவில்லை. இந்த நாட்டிலே வதிகின்ற சிங்கள மக்களோடு நாம் ஒற்றுமையாக, சகோதரத்துவத்துடன் வாழவேண்டுமென்று தான் கேட்டது. நான் இங்கே மிகவும் பெருமையோடு கூற வேண்டியிருக்கிறது. இந்த இரு தலைவர்களும் இறப்பதற்கு முன்னர் கூறியதையும் நான் இங்கே கூறவேண்டியிருக்கிறது. இந்த நாட்டிலே வாழுகின்ற தமிழ் மக்களுக்குத் தனி நாடு வேண்டும் என்று கேட்டிருக்க வேண்டும் என்ற உண்மையை உணர்ந்து நாம் தவறிழைத்து விட்டோம் என்று அத்றகாக வருத்தத்தைத் தெரிவித்துவிட்டுத்தான் எம்மைவிட்டு மறைந்துவிட்டார்கள்.

நாங்கள் பொய்யர்கள் என்று கண்டால், எங்கள் போராட்டத்திலே எந்தவிதமான நியாயமுமில்லை என்று நீங்கள் எண்ணிக்கொண்டால், அதை நீங்கள் பொதுமக்களுக்கு நிரூபித்துக் காட்டுங்கள். தமிழர்கள் இந்த நாட்டிலே சுதந்திரமாக வாழமுடியும் என்பதை நிரூபித்துக் காட்டுங்கள். தமிழர்களுக்கு எந்தவிதமான பாகுபாட்டையும் இந்த ஆட்சியாளர்கள் செய்யவில்லை என்பதை நிரூபித்துக் காட்டுங்

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இலங்கையில் தமிழினக்கொலை! தெருவோர மரங்களில் தமிழர் பிணங்கள்!"

## பிரதமருக்கு சர்வதேச மனித உரிமைக் கழகம் கடிதம்!

**ஆகஸ்ட் மாதம் இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற சிங்கள இனவெறித் தாக்குதல்பற்றி சர்வதேச மனிதஉரிமைக் கழகம் இலங்கைப்பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு கடிதம் எழுதியுள்ளது. நடைபெற்ற இனக் கலவரம் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு எதிராக கையாளப்பட்ட பச்சை இனப்படுகொலையென்பதையும், இலங்கைவாழ் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் இக்கலவரத்தில் படுகொலைசெய்யப் பட்டுள்ளதையும் சர்வதேச மனிதஉரிமைக்கழகம் இலங்கைப் பிரதமருக்கு சுட்டிக்காட்டியுள்ளது.**

மேற்படி கடிதத்தில் சர்வதேச மனிதஉரிமைக் கழகம் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

''இலங்கையில் நடைபெற்ற ஆகஸ்ட் கலவரத்தில் இலங்கைவாழ் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

''பலியான தமிழ் மக்களின் உயிரற்ற உடல்கள் தெருவோரத்து மரங்களில் தொங்க விடப்பட்டு இருந்தன. அவர்களின் உடமைகள் சூறையாடப்பட்டன. சொத்துக்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டிருந்தன.

''இந்தப் படுகொலைகளைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் வேறு இடங்களுக்கு குடிபெயர்த்து கொண்டுவரப்பட்டுபலமுகாம்களில் வசிக்கிறார்கள். இந்த முகாம்களில் வாழும் தமிழர்களின் வாழ்க்கைத் தரமும், நிலையும், சுகாதார வசதிகளும் மிகவும் கவலை தருவதாக உள்ளது''

இவ்வாறு அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. இக்கழகத்தின் சார்பில் பார்வையாளராக இலங்கைக்கு வந்து சென்ற பாரீஸ் மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குரைஞர் ஒருவர் இலங்கை நிலைமைபற்றிக் கருத்தறிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''இலங்கையில் உள்ள சிங்கள மக்களின் நெஞ்சங்களில் தமிழ் இனத்திற்கு விரோதமான உணர்வுகள் மிக ஆழப்பதிந்து காணப்படுகிறது.''

### உதவிக்கரம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மைக்கு விரைந்த பரிகாரம் தேடுவதில் இந்திய அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளன.

''பாரீசில் கூடிய அனைத்துலக மக்கள் உரிமைப் பாதுகாப்புப் பேரவையும் இலங்கையிலே நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் (Massacred) என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. அதன் பார்வையாளரான பாரீஸ் நீதிமன்ற வழக்கறிஞர் திரு. கிறிஸ்டியன் ரோஸ்தோக்கர் நேரிடையாகக் கண்டு வந்து தெரிவித்த விவரங்களின் அடிப்படையிலேயே பேரவை இந்த முடிவுக்கு வந்துள்ளது. ''சிங்களப் பெரும்பான்மையினர் உள்ளங்களில் கடுமையான தமிழர் வெறுப்பு உணர்ச்சி வேர் போட்டுக் கிடக்கிறது'' என்னும் உண்மையை எடுத்துக் காட்டி, — இலங்கை அரசு தனது சிறுபான்மையினருக்குப் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று இலங்கைப் பிரதமரை மனித உரிமைப் பாதுகாப்புப் பேரவை கேட்டுக் கொண்டுள்ளது.

''உலகம் முழுவதையும் வெட்கத்திலும் வேதனையிலும் ஆழ்த்தியுள்ள இந்தப் பிரச்சினையில், அண்டை நாடான இந்தியா உடனடியான அக்கறை காட்டவேண்டியது மிக மிக அவசியம் என்று அறிவியக்கப் பேரவை வலியுறுத்த விரும்புகிறது''...

இவ்வாறு அந்த அறிக்கையில் விளக்கியுள்ளார் டாக்டர் சாலை இளந்திரையன்.

இப் பத்திரிகை, சிலோன் நியூஸ் பேர்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1977ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ம் திகதி புதன் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. அச்சுப்பதிவு—வஸ்தியன் அச்சகம், யாழ்ப்பாணம்.

### "எவ்வழிகளைக்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கள். கடந்த ஏழு ஆண்டு காலமாகத் தமிழ்மக்களுக்குச் செய்யப்பட்ட கொடுமைகளுக்குப் பரிகாரத்தைக் காட்டுங்கள். நீங்கள் நடக்கின்ற முறையிலே எங்களைப் பொய்யனுக்குங்கள். எங்களுடைய கொள்கைகள் பிழையென்பதைத் தமிழ் மக்களுக்குக் காட்டி தமிழ் மக்களே எங்களை நிராகரிக்கச் செய்யுங்கள். நீங்கள் சொல்லிலே ஒன்றைக் கூறிவிட்டு நடைமுறையிலே ஒன்றைச் செய்து கொண்டால் யாரும் அதை நம்பப் போவதில்லை.

நீங்கள் எந்தவிதமான சலுகைகளைக் கொடுத்தாலும் எதிர்காலத்திலே வருகின்றவர்கள் உங்களைப் போற்றிப் புகழப் போவதில்லை. எமக்கு உரிமைகளை வழங்குமுன்னர் எம்மை மனிதர்களாக முதலில் மதியுங்கள், எங்களுக்கென்று ஒரு தனி நாட்டைத் தாருங்கள். நீங்களும் உங்கள் பகுதிகளை ஆளுங்கள். இருநாடுகளுக்கும் சேர்த்து ஒரு பொதுக் கொள்கையை வைத்து ஆட்சியை நடத்துவோம்; தமிழ் ஈழக் கோரிக்கையை பெறுவதற்காக நாம் எவற்றைசெய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து எங்கள் உரிமைகளைக் காப்போம்.

### "ஆக்கிரமிப்பாளர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தது; சிங்களவர்களின் உரிமைகளை தமிழர்களோ, இலங்கையின் வேறு சிறுபான்மை இனங்களோ பறித்து விட்டதாகக் கூறி சிங்களவர்களைத் தட்டியெழுப்புவது எப்போதும் சுலபமான வழியாக இருந்து வருகிறது.

இன்றைய நிலையில் மீண்டும் சிங்கள—தமிழ் மோதல் ஒன்று புதிதாக தோன்றுவதற்குக் குறிப்பிடத்தக்க காரணம் எதுவும் இல்லை. தத்துவ ரீதியாக தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு சுதந்திரம் கோரும் தமிழர் விடுதலைக் கூட்டணியெனும் தமிழ்க்கட்சி கடந்த பொதுத் தேர்தலில் முக்கிய எதிர்க் கட்சியாக வந்திருப்பது உண்மை; அதேபோல ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள், தமிழ் — சிங்கள இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு சர்வகட்சி மாநாட்டைக் கூட்டப் போவதாக அறிவித்திருப்பதும் உண்மை.

ஆனால் தமிழர்கள் மிகவும் கவனமாகவும், நிதானத்துடனும் இயங்குகின்றனர். சிங்களவர்களின் ஆத்திரத்தை எழுப்பிவிடக் கூடிய சந்தர்ப்பம் எதையும் உண்டாக்கும் நோக்கம் தமிழர்களுக்குக் கிடையாது.

சிங்களவர்களே ஆக்கிரமிப்பாளர்களாக இருக்கின்ற நிலைமை தெளிவாகத் தெரிந்திருந்தும், தம்மிடம் பெரும்பான்மை அரசியல் பலம் இருந்தும், திரு. ஜே ஆர்.ஜெயவர்த்தன அவர்களுக்கு தமிழர்களை 'எச்சரிக்கை' செய்ய வேண்டியது அரசியல் ரீதியாக அவசியமாகியது என்றால் — இலங்கை அரசியலின் மையப் பிரச்சனையை இதிலிருந்து தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

தேவையானால் வன்முறையை நாடியேனும் சுதந்திரத்தை மீட்டுக்கொள்வதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கையாக இருந்த போதிலும் — அதற்கு குறைவான சமரசத் தீர்வு காணவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னணித் தலைவர்கள் தயாராக இருக்கின்றனர். ஆனால் — ஒரு சமுதாயத்தின் மன உறுதியை கொலையும் கொள்ளையும் மேலும் பலப்படுத்தவே செய்யும். கடந்த இரண்டு கிழமைகளாக நடைபெற்ற கலவர சம்பவங்கள் — தமிழர் விடுதலைக்கூட்டணியை அதன் பெயரிலுள்ள விடுதலை லட்சியத்தை நோக்கி மேலும் முன்னேறவே உதவியுள்ளது.''

இவ்வாறு எழுதியுள்ள 'கார்டியன்' ஏடு, இலங்கை மற்றோர் 'சைப்பிரஸ்' ஆக உருப் பெறுவதைத் தடுப்பதற்கு ஐக்கியநாடுகள் சபை விரும்பினால் — தனது செலவில், இலங்கையிலுள்ள அரசியல் வாதிகளை சைப்பிரசுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள நிலையை நேரடியாகக் காட்டும்படி அபார்சு செய்துள்ளது.

### றொடீசிய தேசிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேரடியாக தமது தாய்நாட்டின் விடுதலைக்காக செயற்படுகிறார்கள். மாணவர்கள் மாணவர்கள் தாம். அவர்கள் ஆசியாவிலிருந்தாலென்ன, ஆபிரிக்காவிலிருந்தால் என்ன, சிம்பாவேயில் இருந்தாலென்ன, சிறீலங்காவில் இருந்தாலென்ன — மாணவர்கள் தமது கடமையை உணரவேண்டும். இந்தக்கடமையில் நீங்கள் தவறினால், உங்கள் பெற்றோர்கள் மட்டுமல்ல; உங்கள் மக்களே உங்களை எள்ளிநகையாடுவார்கள்!''

இம்மாநாட்டில் — உலக அபிவிருத்தி இயக்க நிர்வாகி திரு. விக்சட்டன் பேசுகையில், பொருளாதார அபிவிருத்தியடைவதற்கு ஒரு சமுதாயத்திற்கு சுயநிர்ணய உரிமை அவசியமென்றும், இதனால் தான் இவ்வளவு காலமும் ஒன்றாக இருந்த ஸ்கொட்டிஷ் மக்கள் இன்று சுயாட்சி கோருகிறார்கள் என்றும் எடுத்துரைத்தார்.

இம்மாநாட்டில் திரு. யோன்டணர், தென்னபிரிக்க தேசிய காங்கிரசின் மாணவர் பிரதிநிதி திரு. மைக்கல்சிறேனியா, டாக்டர் சிறீபத்மநாதன், டாக்டர் ராஜசுந்தரம், திரு. ரெவர் பிலிப்ஸ், டாக்டர் இ. நித்தியானந்தன், திரு. க. தம்பையா, இ. சோதிநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## பல்கலைக்கழகதமிழ்மாணவர்கள் முடிவு!

**சமீபத்தில் நடைபெற்ற** சிங்கள இனவெறிக் கொடுமை காரணமாக தங்கள் வளாகங்களைவிட்டு வெளியேறி தாயகம் திரும்பிய சகல பல்கலைக் கழக வளாகங்களையும் சேர்ந்த தமிழ் மாணவர்கள், தாம் சமர்ப்பித்துள்ள ஏழு அம்சக் கோரிக்கைகளையிட்டு பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், கல்வியமைச்சர், பல்கலைக் கழக உபவேந்தர், வளாகத் தலைவர்கள், மாணவர் சங்கத் தலைவர்கள், பாதிக்கப்பட்ட பல்கலைக் கழக சகல வளாக தமிழ்மாணவர் விரிவுரையாளர்கள், அமைப்பின் பிரதிநிதிகள், ஆகியோரடங்கிய ஏழு அம்சக் கோரிக்கைகளையிட்டு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஒரு மாநாட்டைக் கூட்டும் வரை வளாகங்களுக்குத் திரும்புவதில்லையென்று முடிவு எடுத்துள்ளனர். 25-8-77ல் யாழ் புனித பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைப் பல்கலைக்கழக சகல வளாகங்களையும் சேர்ந்த தமிழ் மாணவ, மாணவிகள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் ஆகியோரடங்கிய கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. கிழக்கு மாகாண பிரதிநிதிகளுடனும் தொடர்பு கொண்டே இம்முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூட்ட அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

### மாஸ்கோவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தில் சிங்கள மாணவர்களுக்கு தூதரக அதிகாரிகள் தனிச் சலுகையும் விசேட அக்கறையும் செலுத்துவதாகவும், தமிழ் மாணவர்களை புறக்கணித்து ஒதுக்குவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தப் பாரபட்சங்களை ஆட்சேபிப்பதற்கும் தமது நிலையை எடுத்துச் சொல்வதற்கும் தமிழ் மாணவர்கள் 30 பேர் மாஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரைச் சென்ற வாரம் சந்திக்க முயன்றபோது அதற்கு சந்தர்ப்பமளிக்கவும் மேற்படி தூதர் மறுத்ததுடன், தூதரகக் கதவையும் பூட்டி விட்டு, 20 சோவியத் பொலீசாரை காவலுக்கும் நிறுத்தியிருந்தார். இந்தச் சம்பவம் தமிழ் மாணவர் மத்தியில் மேலும் விரக்தியையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

சகல தேசிய இனங்களுக்கு மிடையே சமத்துவத்தை உறுதிப்படுத்தியிருக்கும் சோவியத் ரஷியா மண்ணிலிருந்தும், இலங்கைத் தூதருக்கு குறுகிய சிங்கள இனவாதப்புத்தி போகவில்லையேயென்று தமிழ் மாணவர்கள் கவலை தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org